பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 04 2025 **FRIDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக – பிஜேபி இணைந்து போட்டியிடும் என்று மத்தியஉள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா அறிவித்துள்ளார்.

- இந்தியாவும், இத்தாலியும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

- உலக சந்தையில் இந்திய ஆட்டோமொபைல் வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்த அறிக்கையை நித்தி ஆயோக் இன்று வெளியிட்டது.

- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

>>>>>><<<<<<<

அனைவரின் நலனுக்கான அனைவரின் முயற்சி என்ற தாரக மந்திரம், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், ஸ்ரீஅனந்பூர் கோவில் வளாகத்தில் பக்தர்களிடையே உரையாற்றிய பிரதமர், மக்களுக்கான சேவை ஒன்றையே கொள்கையாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மக்கள் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், மத்திய அரசு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் ஆயுஷ்மான் திட்டம், அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம், குழாய் மூலம் குடிநீர் வசதி உள்ளிட்ட திட்டங்களின் மூலம் மக்கள் பெரிதும் பயன்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

மக்களுக்கான சேவை என்ற உணர்வுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறிய பிரதமர், அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காகவும் அரசு பாடுபட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உதவும் மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒட்டுமொத்த உலகின் பொருளாதார வளர்ச்சி மட்டுமன்றி, அமைதி, போர்நிறுத்தம், ஜனநாயகம், மனிதகுல மாண்புகள் ஆகியவற்றுக்காகவும் இந்தியா உலக அரங்கில் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்வைதம் நமக்கு போதித்த சிந்தனைகளின் அடிப்படையில் உலகின் பல சவால்களுக்கு நாம் தீர்வு காண வேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

முன்னதாக அனந்பூரில் உள்ள குருஜி மஹராஜ் கோவிலுக்குச் சென்று திரு. நரேந்திர மோடி வழிபாடு செய்தார்.

>>>>>><<<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக – பிஜேபி இடையேயான கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா அறிவித்துள்ளார்.

இன்று சென்னையில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தேசிய அளவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலும், தமிழக அளவில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தலைமையிலும் தேசிய ஜனநாயக கூட்டணி செயல்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

இந்த கூட்டணியை அமைப்பதற்காக அஇஅதிமுக எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்த கூட்டணி இரு கட்சிகளுக்கும் பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

அஇஅதிமுக உள்கட்சி விவகாரங்களில் பிஜேபி தலையிட விரும்பவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து பின்னர் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஊழல் புகார்கள் தொடர்பாக மக்களின் கவனத்தை திசைதிருப்பவே மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுசீரமைப்பு, நீட் தேர்வு உள்ளிட்ட பிரச்சினைகளை திமுக அரசு எழுப்புவதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் திமுக அரசு ஊழல்புரிந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<<

இந்தியாவும், இத்தாலியும் பல்வேறு துறைகளில் வலுவான ஒத்துழைப்பை மேற்கொள்ளவிருப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இத்தாலியின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Antonio Tajani-**யுடன் இணைந்து புதுதில்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், பல்வேறு புதிய துறையில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதற்கான முயற்சிகள் இருதரப்பு வர்த்தகத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அமையும் என்றும், 15 மில்லியன் டாலர் அளவிற்கு இருதரப்பு வர்த்தகம் அதிகரிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அறிவியல், தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள், கல்வி, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு கூட்டு முயற்சிகளுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பிய பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் உலக உயிரி எரிவாயு ஒத்துழைப்பு கூட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு இருதரப்பிலும் முதலீடுகள் அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்திய – ஐரோப்பிய தாராள வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில், வர்த்தக மேம்பாட்டிற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலா, விண்வெளி தொழில்நுட்பம், பாதுகாப்பு உற்பத்தி, கப்பல் கட்டுமானத் தொழில் ஆகியவற்றில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

இத்தாலிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Antonio Tajani** செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியா – இத்தாலி இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முக்கிய நாளாக இன்றைய தினம் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

இந்தியாவுடன் தாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் நேர்மறையாகவும், ஆக்கபூர்வமாகவும் அமைந்திருந்ததாக அவர் கூறினார்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றுத் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகள் மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும் திரு. **Antonio Tajani** தெரிவித்தார்.

**>>>>>><<<<<<<**

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, போர்ச்சுகல் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு புதுதில்லி புறப்பட்டார்.

ஸ்லோவாக்கியாவின் **Bratislava** நகரில் தம்மை சந்தித்த இந்திய வர்த்தக தூதுக்குழுவினருடன் கலந்துரையாடிய குடியரசுத்தலைவர், இந்தியாவில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்.

**>>>>>><<<<<<<**

உலக வர்த்தகத்தை மேம்படுத்துவதில் ஆட்டோமொபைல் துறையின் பங்கு என்ற தலைப்பிலான அறிக்கையை நித்தி ஆயோக் இன்று வெளியிட்டது.

தானியங்கி தொழில்நுட்பத்தில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சி குறித்து இந்த அறிக்கையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் இந்தியாவின் ஆட்டோமொபைல் வர்த்தகத்தில் தற்போதைய நிலை குறித்தும், மேலும் அதனை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் குறித்தும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலதிகாரி திரு. **B.V.R. Subramanyam** முன்னிலையில் நித்தி ஆயோக்கின் துணைத்தலைவர் திரு. **Suman Bery** இந்த அறிக்கையை வெளியிட்டார்.

உலக சந்தையில் ஆட்டோமொபைல் உற்பத்தி பொருட்களுக்கான போட்டியை இந்தியா எதிர்கொள்வதற்கு தேவையான நீண்டகால யுக்திகளை வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்த அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி, குறைந்த செலவில் உற்பத்தியை பெருக்கவும், தானியங்கி பொருட்கள் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நித்தி ஆயோக்கின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேசிய நித்தி ஆயோக் தலைமைச்செயலதிகாரி திரு. **B.V.R. Subramanyam** பேசும்போது, இந்த அறிக்கையை தயாரிக்க விரிவான அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

2 டிரில்லியன் டாலர் உலக தானியங்கி சந்தையில் இந்தியாவின் பங்கு 70 பில்லியன் டாலராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<<

சுகோய் 30 ரக விமானத்திலிருந்து நீண்ட தொலைவில் உள்ள இலக்கை தாக்கவல்ல கிளைடர் வகை கவ்ரவ் குண்டுகள் இன்று வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டது.

பாதுகாப்புத்துறை அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 100 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை கவ்ரவ் குண்டுகள் துல்லியமாக தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் கிலோ எடை கொண்ட இந்த வகை குண்டுகள், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.

சாந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பயிற்சி வளாகத்தில் இந்த குண்டுகள் சோதித்து பார்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகோய் ரக விமானத்திலிருந்து வெற்றிகரமாக கவ்ரவ் குண்டுகள் சோதித்து பார்க்கப்பட்டதற்கு பாதுகாப்புத்துறை திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதனை உருவாக்கி வெற்றிகரமாக சோதித்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் விஞ்ஞானிகள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

பஜாஜ் ஆட்டோ நிறுவனத்தின் முன்னாள் துணைத்தலைவர் **Madhur Bajaj** இன்று காலை மும்பையில் காலமானார். அவருக்கு வயது 63.

உடல்நலக்குறை காரணமாக சில நாட்களுக்கு முன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று காலை அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிர் பிரிந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**Madhur Bajaj** மறைவுக்கு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

கிழக்கு காஸா நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.

இப்பகுதியில் ராணுவம் தனது தாக்குதலை தீவிரப்படுத்தவுள்ளதாகவும், காஸாவின் மேற்குப் பகுதிக்கு பாதுகாப்பாக செல்லுமாறு இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தி தொடர்பாளர் திரு. **Avichay Adrate** கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பகுதியில் உள்ள தீவிரவாத கட்டமைப்புகளை அழிக்க வேண்டிய நிர்பந்தம் தங்களுக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த **Ahmad Iyad Muhammad** தெற்கு காஸாவில் உள்ள **Tel Al Sultan**-ல் கொல்லப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

இப்போட்டி சென்னையில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ளது.

>>>>>><<<<<<<

ஆசிய கோப்பை கால்பந்துப் போட்டியை நடத்துவதற்கு இந்தியா உரிமை கோரியுள்ளது.

2031ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இப்போட்டியை நடத்துவதற்கு ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, கொரியா உள்ளிட்ட 6 நாடுகளும் உரிமை கோரியுள்ளதாக ஆசிய கால்பந்து சம்மேளனம் கூறியுள்ளது.

>>>>>>END<<<<<<<